ISSN : 2456-821X அவையம் 3(1) 2019 ப.எண். 25-39

புதிய அவையம்
SACRED HEART RESEARCH PUBLICATIONS
SACRED HEART COLLEGE

## மறுவாசிப்பில் தொல்காப்பியத் தொடையும் பிற்கால யாப்பியல் நூல்களும்

**முனைவர் பி.பாலசுப்பிரமணியன்**

*இளங்கலை & முதுகலைத் தமிழ்த்துறைத் தலைவர் (பி2)*
*தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி)*
*திருப்பத்தூர் - 635601*
*வேலூர் மாவட்டம்.*

**கட்டுரை பெறப்பட்டது : 02.06.2019** **ஏற்கப்பட்டது : 14.06.2019**

எழுத்து மரபு உருவாக்கத்திற்கு முன்பு ஆதித் தமிழர்களின் அகம், புறம் சார் வாழ்வியல் பதிவுகள் ஒவ்வொரு காலகட்டத்திலும் வாய்மொழி வழக்காறுகளாகப் பேசப்பட்டு வந்திருக்கலாம். எழுத்து உருவாகிய பிறகு மொழியின் வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு அக்கால வாழ்வியல் அனுபவங்கள் கவிதைகளாகப் பாட்டுக்களாக அடையாளப்படுத்தப்பட்டிருக்க வாய்ப்பிருக்கிறது . அவற்றிற்கு இலக்கியம் என்ற பெயர் ஏற்படலாயிற்று. இவ்இலக்கிய உருவ, உள்ளடக்கங்களைத் தொல்காப்பியர் 'தொல்காப்பியம்' என்ற பெயரில் இலக்கணமாக மொழிந்திருக்கிறார்.தொல்காப்பியம் தமிழில் கிடைத்திருக்கக்கூடிய முதல் நூலாக ஆவணப்படுத்தப்படுகிறது. தொல்காப்பியத்திற்கு முன்பு உள்ள இலக்கிய , இலக்கண நூல்கள் கால வெள்ளத்தில் அழிந்து போயிருக்கலாம் . தொல்காப்பியர் தான் வாழ்ந்த தனக்கு முன்பாகப் பேசப்பட்ட எழுதப்பட்ட இலக்கிய , இலக்கணங்களை வாசித்தப் பிறகு , தொல்காப்பியத்தை எழுதியிருக்கலாம் என்பதற்கு நூலில் பல சான்றுகள் உள்ளன. தொல்காப்பியர் யார்? அவரது காலம், சமயம் எது ? அவர் காலத்து வழக்குகள் என்ன ? தொல்காப்பியம் வாய்மொழி யாகச் சொல்லப்பட்டதா ? எழுதப்பட்டதா?

எப்போது எழுதப்பட்டது ? யார் எழுதினார்கள்? எப்போது தொகுக்கப்பட்டது ? உரை எழுதப்பட்ட காலம் எது ? சமகாலம் வரையிலும் அதனை வாசிப்பதற்கான தேவை யாது ? குறிப்பாக, இன்றைய படைப்பாளிகளிடம் தொல்காப்பியம் ஏற்படுத்தும் தாக்கம் என்ன ? என்ற பல கேள்விகள் நீண்டு கொண்டேயிருக்கிறது.

ஒரு பனுவல் மறுவாசிப்பு செய்யப்படுகிறபோது அதனுள் பொதிந்திருக்கிற பல்வேறு அணுகுமுறைகள் (பன்முகப்பார்வை) வெளிப்படத் தொடங்குகிறது. வாசகன், வாசிப்பாளன் காலத்திற்கேற்றவாறு இலக்கணத்தை உள்வாங்கிக் கொள்வான். இங்கு, தொல்காப்பியத்தின் நோக்கம் அகம், புறம் சார் வாழ்வியல் கவிதைகளைச் செய்யுள் உறுப்புகளால் கட்டமைத்து வாசகனுக்கு வழங்க முயற்சிப்பதே ஆகும். 34 உறுப்புகள் என்பது நிரந்தரமானதல்ல. ஏனெனில் கவிதையை இலக்கண வரையறைக்குள் கட்டிவிட முடியாது.

**தொல்காப்பியம் நோக்கம்**

அகம், புறம் சார் வாழ்வியலைக் கவிதையாக உருவாக்கித் தர தொல்காப்பியர் எழுத்து, சொல் இலக்கணத்தைப் படைத்திருக்கிறார். தனக்கு முன்பிருந்த கவிதைகளிலிருந்து பிற்காலப் படைப்பாளனுக்குத் தமிழ்மொழியின் எழுத்து, சொல் இலக்கணக் கட்டமைப்பையும் உருவம், உள்ளடக்கச் செய்திகளையும் கற்பிக்க முயற்சித்திருக்கிறார்.

தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் 8-ஆவது இயலில் செய்யுள் இலக்கணம் உணர்த்தப்பட்டதால் இது செய்யுளியல் எனப்பட்டது. செய்யுளியல் 34 உறுப்புகள் அடங்கிய இயலாக உருவாக்கப்பட்டுள்ளது. செய்யுள் என்பதற்குச் செய்யப்படுவது, உருவாக்கப்படுவது, எழுதப்படுவது, படைக்கப்படுவது எனப் பொருள் கொள்ளலாம். செய்யுளியலைப் படைப்பிலக்கியம், படைக்கப்பெறும் இலக்கியம் என்றும் அர்த்தப்படுத்திக் கொள்ளலாம். செய்யுளியலைத் தமிழண்ணல் இலக்கிய இயல் என்று அடையாளப்படுத்துவார். செய்யுளியல் எழுத்து, அசை, சீர், அடி, தொடையாகப் பாட்டுக் கட்டுதல், இலக்கிய வகைகள், கொள்கைகள், உத்திகள் போன்றவற்றை உள்ளடக்கியதாக அமைந்திருக்கிறது.

தொல்காப்பியர் தமது இலக்கணத்தில் இலக்கிய வழக்கு, உலகியற் வழக்கு பற்றிக் கவிதை பாடவேண்டும் என்கிறார். பல கூறுகளின் உறுப்புகளின் கட்டமைப்பு இலக்கியம். இலக்கியம் ஒரு முழுமையின் உறுப்புகள், உறுப்புகளின் முழுமை எனலாம்.

தொல்காப்பியப் பொருளதிகாரத்திலுள்ள மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல் ஆகிய பின் 4 இயல்கள் இலக்கியக் கோட்பாட்டினை உணர்த்தும் இயல்களாகும்.

செய்யுள் உறுப்புகள் - 34

யாப்பிலக்கணப்பகுதி (26) வனப்பு (8)

யாப்பிலக்கணப்பகுதி தனிநிலைச்செய்யுள் உறுப்புகள் 12 ஆகவும் அகப்பாட்டுறுப்புகள் 14 ஆகவும் வரையறுக்கப்பட்டுள்ளது. மாத்திரை, எழுத்தியல், அசை, சீர், அடி, யாப்பு, மரபு,

*தூக்கு, தொடை, நோக்கு, பா, அளவியல் ஆகிய பன்னிரண்டும் தனிநிலைச்செய்யுள் உறுப்புக்களாகும். திணை, கைகோள், பொருள்வகை, கூற்றுவகை, கேட்போர், களன், காலம், பயன், மெய்ப்பாடு, எச்சவகை, முன்னம், பொருள், துறைவகை, மாட்டு போன்ற அகப்பாட்டுறுப்புகள் 14 வகைகளாகும்.*

*வனப்பு தொடர் நிலைச் செய்யுளுக்குரிய உறுப்பாகக் காட்டப்பெறும் . அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு ஆகிய எட்டும் வனப்புகளாகும்.*

*இந்த உறுப்புக்களைப் பட்டியலிட்டது தொல்காப்பிய ர் அல்ல. தொல்காப்பியருக்கு முன்பிருந்த சான்றோர்கள் ஆவர்.*

**தொல்காப்பியம் - தொடை**

*தொடை என்பதற்கான விளக்கம் தொல்காப்பியரால் குறிப்பிடப்படவில்லை.*

*"மோனை எதுகை முரணே இயைபென*

*நால்நெறி மரபின தொடைவகை என்ப" (தொல்.செய்.நூ.84)*

*எல்லா இலக்கண நூல்களும் தொடைவகையை 5 எனக் குறிப்பிடும் . வீரசோழியம் மட்டும் எதுகை, மோனை என்ற இரண்டை மட்டும் குறிப்பிடும்.*

*'அளபெடை தலைப்பெய ஐந்தும் ஆகும்' (தொல்.செய்.நூ.85)*

*"பொழிப்பும் ஒரூஉஞ் செந்தொடை மரபும்*

*அமைந்தவை தெரியின் அவையுமா ருளவே" (தொல்.செய்.நூ.86)*

*"நிரனிறுத் தமைத்தலும் இரட்டை யாப்பும்*

*மொழிந்தவற் றியலான் முற்றும் என்ப" (தொல்.செய்.நூ.87)*

*ஆகிய நான்கு நூற்பாக்கள் தொகையின் பாகுபாட்டை விவரிக்கின்றன.*

*தொடையை அடிதோறும் வருவன 5 எனவும் அடிக்கண் வருவன 5 எனவும் தொல்காப்பியர் தொடையின் பாகுபாட்டினை விரித்துக் கூறுகிறார் . பிற்காலத்தில் உருவான யாப்பிலக்கண நூல்களில் தொடை வகைகள் இலக்கிய வகைமை களுக்கு ஏற்றவாறு மாற்றம் பெறுகின்றன.*

தொடைப் பாகுபாடு

*அடிதோறும் வருவன (5)* → *மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடை இரட்டைத்தொடை*

*அடிக்கண் வருவன (5)* → *பொழிப்பு, ஒரூஉ, செந்தொடை* ; *நிரனிறுத்தல்*

தொல்காப்பியர் செந்தொடையை விகற்பத் தொடையோடு சேர்ப்பார். நிரனிறுத்தல் பொருள்கோளிலும் அணியிலும் வரும். நிரனிறுத்தலைத் தொல்காப்பியர் சிறப்பித்துக் கூறுவார்.

**தொடை வகைகள் விளக்கம்**

1. **மோனை :** அடிதோறும் தலையெழுத்து (முதலெழுத்து) ஒன்றி வருவது மோனை.

"அடிதொறுந் தலையெழுத் தொப்பது மோனை" (செய்.நூ.88)

சான்று : **மா**வும் புள்ளும் பதிவயின் படர
**மா**நீர் விரிந்த பூவும் கூம்ப (யாப்.விரு.ப.120)

2. **எதுகை :** அடிதோறும் முதலெழுத்து ஒன்றாமல் இரண்டாம் எழுத்து ஒன்றின் எதுகையாகும்.

"அஃதொழித் தொன்றின் எதுகை ஆகும்" (செய்.நூ.89)

சான்று : அ**டி**தாங்கும் அளவின்றி அழலன்ன வெம்மையிற்
க**டி**யவே கனங்குழாஅய் காடென்றாh; அக்காட்டுள்
து**டி**யடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பி**டி**யூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவும் உரைத்தனரே" (கலித். பா.11)

மேற்கண்ட இரண்டு தொடைகளுக்கும் எடுத்த எழுத்தே வருதலன்றி வ ர்க்க எழுத்துக்களும் (கிளை எழுத்து) வரும்.

"ஆயிரு தொடைக்குங் கிளையெழுத் துரிய" (செய்.நூ.90)

வருக்க மோனை: "**ப**கலே, பல்பூங் கானற் கிள்ளை ஒப்பியும்
**பா**சிலைக் குளவியொடு கூதளம் விரைஇய
**பி**ன்னிப்பாணி அவிழ்ந்த நன்னெடுங் கூந்தல்
**பீ**ர்ங்கப் பெய்து தேம்படக் கருதி" (யாப்.வி.ப.135)

வருக்க எதுகை: ஆ**ற**நி அந்தணர்க் கருமறை பலபகரந்து
தே**று**நீர் சடைக்கரந்து திரிபுரம் தீமடுத்து
கூ**றா**மற்……………..
மா**றா**ப்போர்………….. (கலி.க.வா.)

3. **முரண்தொடை :** அடிதோறும் வந்த சொல்லினாலும் பொருளினாலும் முரண்படத் (மாறுபடத்) தொகுப்பது.

"மொழியினும் பொருளினும் முரணுதல் முரணே" (செய்.நூ.91)

முரண் - சொல் முரண்
பொருள் முரண்

சொல் முரண் சான்று: "**சிறு**குடிப் பரதவர் மடமகள்

**பெரு**மதர் மழைக்கணும் உடையவால் அணங்கே" (யாப்.பி.ப.146)

இப்பாடலில் சிறுமை, பெருமை என்ற சொற்கள் முரண்படுகின்றன.

பொருள் முரண் சான்று: "**இருப்பின்** அன்ன கருங்கோட்டுப் புன்னை
**பொன்னின்** அன்ன நுண்தா துறைக்கும்" (யாப்.வி.145)

இரும்பும் பொன்னும் மாறுபாடு உடைத்தாதலிற் பொருள் முரண் ஆயிற்று.

4. **இயைபுத் தொடை :** அடிதோறும் ஈற்றெழுத்து ஒன்றி வந்தால் அதனை இயைபுத் தொடை என்பர்.

"இறுவாய் ஒப்பினஃ தியைபென மொழிப" (செய்.நூ.92)

சான்று : இன்னகைத் துவர்வாய் கிளவியும் **அணங்கே**
நன்மா மேனிச் சுணங்குமார் **அணங்கே**
ஆடமைத் தோளி கூடலும் **அணங்கே**
அரிமதர் மழைக்கணும் **அணங்கே**
திருநுதற் பொறித்தத் திலகமும் **அணங்கே** (யாப்.வி.ப.153)

அசை, சீரென வரையறுக்காமல் கூறியதால் ஒரெழுத்து மட்டும் இறுதியில் ஒப்பினும் இயைபுத் தொடையில் அடக்குவர்.

5. **அளபெடைத் தொடை :** அடிதோறும் (அளபெழத் தொடுப்பின்) அளபெடுத்து வந்தால் அதற்கு அளபெடைத் தொடை என்று பெயர்.

'அளபெழின் அவையே அளபெடைத் தொடையே' (செ.நூ.93)

சான்று : "**ஓஒ** இனிதே எமக்கிந்நோய் செய்தகண்
**தாஅ**கம் இகறப்பட் டது" (குறள்.1176)

6. **பொழிப்புத் தொடை :** ஒரு சீர் இடையிட்டு எதுகையாய் வரல் பொழிப்புத் தொடை (1, 3) எனப்படும்.

"ஒரு சீரிடையிட் டெதுகை யாயின்
பொழிப்பென மொழிதல் புலவர் ஆறே" (செய்.நூ.94)

நூற்பாவில் எதுகை பொழிப்பு வந்தாலும் 'வந்தது கொண்டு வாராதது முடிதல்' என்ற விதிப்படி மோனை, இயைபு, முரண், அளபெடை என்பனவும் பொழிப்புத் தொடைகளாகும்.

பொழிப்பு மோனை : **அ**ரிக்குரற் கிண்கிணி **ய**ரற்றுஞ் சீறடி
பொழிப்பு எதுகை : ப**ன்**னருங் கோங்கின் ந**ன்**னலங் கவற்றி
பொழிப்பு முரண் : **சுருங்கி**ய நுசுப்பிற் **பெருகு**வடந் தாங்கி
பொழிப்பு இயைபு : கட**லே** கானலங் கழி**யே** கைதையந் துறையே
பொழிப்பு அளபெடை : **பூஉ**ங் குவளைப் **போஒ** தருந்தி (பா.வி.ப.130,34,47,58)

7. **ஒரூஉத்தொடை :** இரண்டு சீர் இடையிட்டு மோனை முதலான வரத்தொடுப்பது ஒரூஉத் தொடை*(1,4).*

"இருசீர் இடையிடின் ஒரூஉவென மொழிப" *(செய்.நூ.95)*

*சான்று :*

ஒரூஉ மோனை : **அம்**பொற் கொடிஞ்சி நெடுந்தேர் **அ**கற்றி

ஒரூஉ எதுகை : **மின்**னிவர் ஒளிவிடந் தாங்கி ம**ன்**னிய

ஒரூஉ முரண் : **குவிந்து**சுணங் கரும்பிய கொங்கை **விரிந்து**

ஒரூஉ இயைபு : நிழ**லே** இனியதன் அயலது கட**லே**

ஒரூஉ அளபெடை : **காஅய்**க் செந்நெற் கறித்துப் **போஒய்**

8. **செந்தொடை :** மேற்சொல்லப்பட்ட தொடையும் ஃ தொடை விகற்பமும் போல் இல்லாமல் வேறுபடத் தொடுப்பது செந்தொடையாகும்.

"சொல்லிய தொடையொடு வேறுபட்டியலின்
சொல்லியற் புலவர்அது செந்தொடை என்ப" *(செய்.நூ.96)*

சான்று : "பூத்த வேங்கை வியன்சினை ஏறி
மயிலினம் அகவும் நாடன்
நன்னுதற் கொடிச்சி மனத்தகத் தோனே" *(யா.வி.பக்.179)*

மேலும், நிரல் நிறுத்தியற்றல் , இரட்டைத்தொடை என்று தொல்காப்பியர் கூடுதலாக *2* வகைகளைக் குறிப்பிடுகிறார்.

***நிரனிறைத் தொடை :*** பொருளைச் சேர நிறுத்திப் பயனையும் சேர நிறுத்துதல்.

சான்று : அடல்வேல் அமர்நோக்கி நின்முகங் கண்டே
உடலும் இரிந்தோடும் ஊழலரும் பார்க்குங்
கடலுங் கனையிருளும் ஆம்பலும் பாம்புந்
தடமதி யாமென்று தாம்" *(யா.வி.பா.182)*

இது பொருளால் வேறுபட்ட துணையல்லது எழுத்தால் வேறுபடாமையின் எது கைத் தொடை என்பர்.

***இரட்டைத்தொடை:*** ஓரடி முழுவதும் ஒரே சொல்வருதல்.

சான்று: "ஒக்குமே ஒக்குமே ஒக்குமே யொக்கும்
விளக்கினிற் சீறெரி ஒக்குமே ஒக்கும்
குளக்கொட்டிப் பூவின் நிறம்" *(யா.வி.பக்.180)*

***தொடை விரி :*** தொடைகளின் விரி பலவாக அமைகிறது . தொல்காப்பியர் அவர் காலத்துக்கு முன்பு அல்லது அதன்பின் பிரிந்து வந்துள்ள அவர் காலத்துத் தொடைகளின் எண்ணிக்கையை

*நூற்பாவில் குறிப்பிட்டுள்ளா ர். ஆனால், அந்நூற்பாவிற்குத் தொல்காப்பிய ர் உரை எழுதவில்லை. அதன் காரணமாக உரையாசிரியர்களுக்குள் கருத்து வேறுபாடு நிலவுகிறது.*

*"மெய்பெறு மரபின் தொடைவகை தாமே*
*ஐயீ ராயிரத் தாறைஞ் நூற்றோடு*
*தொண்டுதலை யிட்ட பத்துக்குறை யெழுநூற்*
*றொன்பஃ தென்ப உணா;ந்தி சினோரே"*

*என்ற நூற்பாவை ஆதாரமாகக் கொள்ளலாம்.*

*தொடைகளின் வி ரியைக் கூறுவதில் உரையாசிரிய ர்களிடையே பெருத்த கருத்த வேறுபாடுகள் உள்ளன.*

*இளம்பூரணர் தொடையின் பாகுபாட்டை 13,699 என்றும் பேராசி ரியர் 13,708 என்றும் நச்சினார்க்கினியா; 19,291 என்றும் குறிப்பிடுகிறார். தொல்காப்பிய நூற்பாவிலும் 13,708 என்றே குறிப்பிடப்படுகிறது. தொல்காப்பியர் 13,708 தொடைகள், விரி பற்றிய விளக்கத்தைத் தெளிவாகக் கூறவில்லை . பிற்கால இடைவெளிகளுக்குப் பிறகு இளம் பூரணர் தொடைவிரி குறித்து உரை எழுதுகிறார். அவையும் தக்கச் சான்றுகளுடன் விளக்கப் பெறவில்லை.*

*"வடிவுபெற்ற மரபினையுடைய தொடையினது பாகுபாடு பதின்மூவாயிரத் தறுநூற்றுத் தொண்ணுற்றொன்பது என்றவாறு " என்கிறார் இளம்பூரணர். இதனைச் செய்யு ள் இலக்கணம் அறிந்தவர்கள் உரைப்பார்கள்.*

| | | |
|---|---|---|
| *மோனைத் தொடை* | - | *1019* |
| *எதுகை* | - | *2473* |
| *முரண்* | - | *02* |
| *இயைபு* | - | *182* |
| *அளபெடை* | - | *159* |
| *பொழிப்பு* | - | *654* |
| *ஒரூஉ* | - | *654* |
| *செந்தொடை* | - | *<u>8556</u>* |
| *ஆகத் தொகைவிற்பம்* | | *<u>13,699</u>* |

*தொகை வி ரி என்பது விவாதத்திற்கு ரியதாகும். இந்த நூற்பாவின் விளக்கத்தில் இளம்பூரணர் , பேராசிரியரிடையே கருத்து வேறுபாடுகள் உண்டு.*

*தொகை பற்றிய புறனடை நூற்பாக்கள்,*

*'தெரிந்தனர் விரிப்பின் வரம்பில ஆகும்' (செய். நூ.97)*

*'தொடைநிலை வகையே ஆங்கென மொழிப' (செய்.நூ.98)*

*என்று குறிப்பிடுகிறது.*

மேற்சொல்லப்பட்டத் தொடையினை ஆராய்ந்து வி  ரிப்பின் வரம்பில்லாமல் வி  ரியும் என்பது தொல்காப்பியர் கருத்து.

இளம்பூரணர் விரியும் என்ற கருத்தை உள்வாங்கி அவ  ர்காலத்துத் தொடை வகைகளை விளக்க முற்படுகிறார்.

இணை, கூழை, முற்று, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், கடை, கடையிணை, கடைக்கூழை, இடைப்புணர் என்று தொடை விகற்பங்களை விவரிக்கிறார்.

எழுத்தந்தாதி/ சீர் அந்தாதி/ அசையந்தாதி/ அடியந்தாதி –
உயிர் மோனை/ நெடில் மோனை/ வருக்க மோனை/ இன மோனை/ இன எதுகை/ ஆசெதுகை/ மூன்றாமெழுத்தொன்றெதுகை/ இடையிட்டெதுகை போன்று காலத்திற்கேற்றவாறான தொடைகளின் விரியை சான்றுடன் விளக்க முற்படுகிறார் இளம்பூரணர்.

தொடைநிலை வகை மேற்சொல்லப்பட்ட பாகுபாட்டின் வழியிலேயே அமைகிறது . எழுத்து/ சொல்/ பொருளால் தொடைகள் வேறுபடுவதே தொடைநிலை வகைகளாகும்.

**அவிநயம் - தொடை**

உரையாசிரியர்களால் அதிகம் மேற்கோள் காட்டப்பட்ட நூல் அ  விநயம். இந்நூல் எழுத்து, சொல், பொருள், யாப்பதிகாரம், அவிநயனார் புறநடை, அவிநயனார் பாட்டியல் போன்ற பிரிவுகளுடையது . ‘மறைந்துபோன தமிழ் நூல்கள் ’ *(1967)* என்ற நூலில் *45* இலக்கண நூல்களைத் தருகிறார் மயிலை சீனி வேங்கடசாமி. அவற்றுள் ஒன்று அவிநயம்.

பல உரைகளிலிருந்து இ ந்த நூலின் நூற்பாக்களைத் தொகுத்து வகைப்படுத்தி *1975*-இல் சைன இளைஞர் மன்றத்தின் வழி வெளியிட்டவர் க.ப.அறவாணன். அவிநயம் உரை எழுதியவர் இராச பவுத்திரப் பல்லவதரையன் என்பதை மயிலைநாத  ர் நன்னூல் உரையிலிருந்து அறியப்பட்டது. அவிநயனார் சைனமதத்தைச் சா ர்ந்தவர் ஆவார். இது ஐந்திலக்கண நூல் . இந்நூலில் யாப்பதிகாரம் என்ற தனிப்பகுதி உள்ளது.

தொடை

→ அடித்தொடைகள் → அளபெடை/ முரண்/ செந்தொடை/ இரட்டைத்தொடை

→ தொடை விகற்பம் → மேற்கதுவாய்/ கீழ்க்கதுவாய்/ ஒரூஉ

ஒரே பாடலில் பல தொடைகளும் தளைகளும் வரலாம் என்று விதிவிலக்காக இந்நூல் குறிப்பிடுகிறது.

**வீரசோழியம் - தொடை**

வீரசோழன் பெய ரில் பௌத்த சமயத்தைச் சா  ர்ந்த புத்தமித்திரரால் எழுதப்பட்ட நூல் . ஐந்திலக்கணங்களையும் கூறும் முதல் நூலாகக் கொண்டாடப்பட்டது . எழுத்ததிகாரம்,

சொல்லதிகாரம், பொருளதிகாரம், யாப்பதிகாரம், அலங்காரம் என்ற ஐந்து பெரும்பி ரிவுகளைக் கொண்டது. வடமொழி அடிப்படையில் உட்பி ரிவில் படலங்கள் உள்ளன . தமிழில் முதன்முதலாக வடமொழித் தாக்கத்துடன் எழுதப்பட்ட நூல் இது . சோழர் காலத்தில் நிலவிய சமஸ்கிருதச் செல் வாக்கை இது அடையாளப்படுத்துகிறது . இந்நூலின் முதற்பதிப்பு கி .பி.1881. சி.வை.தாமோதரம்பிள்ளையால் பதிப்பிக்கப்பட்டது . யாப்பதிகாரம், யாப்புப்படலம் என்ற பெயரில் கட்டமைக்கப்பட்டிருக்கிறது.

தொடை

- மோனை
  - ஆ, ஆ, ஐ, ஔ
  - த, ச, ஞ, ந
  - அ, ஆ, இ, ஈ
- எதுகை
  1. இரண்டாம் எழுத்து ஒன்றி வரல்
  2. 3-ஆம் எழுத்து ஒன்றி வரல்
  3. சீர் முழுதும் ஒன்றிவந்த எதுகை
  4. இன எதுகை – வல்லினம், மெல்லினம், இடையினம்
  5. 2-ஆம் எழுத்தின் மேல் ஏறிய உயிரெழுத்து ஒத்தும் / ஒவ்வாதும் வந்த உயிர் எதுகை
  6. ஆசு இடையிட்ட எதுகை

இவையிரண்டைத் தவிர வேறு தொடைகள் பேசப்படவில்லை.

**இலக்கண விளக்கம் - தொடை**

குட்டித் தொல்காப்பியம் என அழைக்கப்படும் நூல் . 17-ஆம் நூற்றாண்டில் வைத்திநாத தேசிகரால் எழுதப்பட்டது . பதிப்பித்தவர் சி.வை. தாமோதரம்பிள்ளை. இந்நூலின் பொருளதிகாரத்தில் செய்யுளியல் என்ற பகுதி உள்ளது . பொருளதிகாரம் அகத்திணையியல் , புறத்திணையியல், அணியியல், செய்யுளியல், பாட்டியல் என 5 இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

செய்யுளியலில் தொடை வகை

- தொடை
  - மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடை
- தொடை விகற்பம்
  - இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேற்கதுவாய்,

கீழ்க்கதுவாய், முற்று

பிறதொடைகள் (விகற்பமில்லாத் தொடைகள்)

↓

செந்தொடை, இரட்டை, அந்தாதி

**தொன்னூல் விளக்கம்**

வீரமாமுனிவரால் (இத்தாலி) எழுதப்பட்ட நூல். 1730-இல் எழுதப்பட்டது. இந்நூல் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என 5 அதிகாரங்கள் 370 நூற்பாக்கள் கொண்டது. இலக்கண விளக்கத்தில் சொல்லப்பட்ட அதே வகை முறையே அமைகிறது. கூடுதலாக, மோனைக்கு இன எழுத்துக்களைக் கூறுகிறது.

மோனைக்கு இன எழுத்துக்கள் :

| | |
|---|---|
| அ ஆ ஐ ஔ<br>இ ஈ எ ஏ<br>உ ஊ ஒ ஓ<br>ச த | ஓரினம் |
| ஞ ந<br>ம வ | ஓரினம் |

எதுகை வகை : வீர சோழியம் கூறிய 6 வகை எதுகைகள் இவற்றிலும் குறிப்பிடப்படுகின்றன.

மேலும், இலக்கண விளக்கத்தில் கூறப்பட்டத் தொடை வகைமைகள் இவற்றிலும் கூறப்படுகின்றன.

தொடை 5 + 3 பிற தொடைகள்

தொடை விகற்பம் - 7 + 1 (அடி, இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேல், கீழ், முற்று) = 8 x 5 = 40 + 3 = 43 எனக் குறிப்பிடுகிறது.

**முத்துவீரியம் - தொடை**

முத்துவீரியத்தின் ஆசிரியர் முத்துவீர உபாத்தியாயர். இந்நூல் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம், யாப்பதிகாரம், அணியதிகாரம் என்னும் 5 பெரும்பிரிவுகளை உடையது. 1288 நூற்பாக்கள் கொண்டது. ஆசிரியப்பாவால் பாடப்பட்டது. ஒவ்வொரு அதிகாரத்திலும் 3 இயல்கள். அதிகாரந்தோறும் தனிக்கடவுள் வாழ்த்து. ஐந்திலக்கணங்களுள் மிக விரிந்த நூல். உரையாசிரியர் நாதன் கவிராயர். சார்பெழுத்தில் 2 புதுமை. அளபெடையில் 8 புதுமை. மொழி 7 வகை. 1889-இல் பழனியாண்டி என்பவரால் பதிப்பிக்கப்பெற்றது.

தொடை மோனை, இயைபு, எதுகை, முரண், அளபெடை, அந்தாதி, இரட்டை, செந்தொடை என எட்டு வகைப்படும்.

தொடை விகற்பம் இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேல், கீழ், முற்று என ஏழு வகைப்படும்.

**சுவாமிநாதம் - தொடை**

சுவாமிநாதம் ஆசிரிய ர் சுவாமிநாத கவிராயர். இந்நூல் திருவாவடுதுறை சுப்பிரமணிய தேசிகர் வேண்டுகோளுக்கிணங்க எழுதப்பட்டது. இ.கோவிந்தசாமிபிள்ளை அவர் களால் 1924 இல் பதிப்பிக்கப்பட்டது . 1975 இல் செ .வை.சண்முகம் அவர் களால் பதிப்பிக்கப்பட்டது . எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற 5 பிரிவுகளை உடையது.

யாப்பதிகாரம் உறுப்பு மரபு , பாவினமரபு, பிரபந்த மரபு என 3 வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

தொடை மோனை , இயைபு, எதுகை, முரண், அளபெடை, அந்தாதி, இரட்டை, செந்தொடை என எட்டு வகைப்படும்.

தொடை விகற்பம் இணை , பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேல், கீழ், முற்று என ஏழு வகைப்படும்.

**யாப்பருங்கலம் - தொடை**

யாப்பருங்கலம் அமிர் தசாகரால் 10 நூற்றாண்டில் இயற்றப்பட்டது . யாப்பாகிய செய்யுளுக்கு அணிகலம் எனவும் யாப்பு என்ற கடலைக் கடக்க உதவும் அருங்கலம் எனவும் அழைப்பர். உரையாசிரியர் குணசாகரர் ஆவார்.

தொடை மோனை , இயைபு, எதுகை, முரண், அளபெடை, அந்தாதி, இரட்டை, செந்தொடை என எட்டு வகைப்படும்.

தொடை விகற்பம் இணை , பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேல், கீழ், முற்று என ஏழு வகைப்படும்.

**யாப்பருங்கலக்காரிகை - தொடை**

யாப்பருங்கலக்காரிகையின் ஆசிரியர் அமிர்தசாகரர். இது கட்டளைக் கலித்துறையால் பாடப்பெற்றது. பெண்ணை (மகடூஉ முன்னிலை) விளித்துப் பாடப்பட்டது. களத்தூர் வேதகிரி என்பவரால் 1981 ஆம் ஆண்டு பதிக்கப்பெற்றது.

தொடை மோனை , இயைபு, எதுகை, முரண், அளபெடை, அந்தாதி, இரட்டை, செந்தொடை என எட்டு வகைப்படும்.

தொடை விகற்பம் இணை , பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேல், கீழ், முற்று என ஏழு வகைப்படும்.

தொடை - 5 + 3 = 8

தொடை விகற்பம் – 07 x 5 = 35 + 3 = 38

**தொடையதிகாரம் - தொடை**

புலவர் குழந்தையால் இயற்றப்பெற்றது . முதலியல், எடுத்துக்காட்டியல், ஒழிபியல் என்ற 3 பிரிவுகளாக உடையது.



பதிப்பு அலையம்

*தொடை – அடிகளை ஒன்றோடொன்று தொடுப்பது தொடை எனப்படும் . தொடுத்தல், இணைத்தல், கட்டுதல் என்று பொருள் . 'தொடையற்ற பாட்டு நடையற்றுப் போகும் ' என்பது பழமொழி.*

*இரண்டு அடிகளில் அன்றி , ஓரடிகளிலும் தொடை பயின்று வரும் . மோனைத் தொடையின் சிறப்பு இதில் புதிதாக விளக்கப்பட்டுள்ளது.*

*செய்யுளின் ஓசை நயமும் இனிமையும் தொடையின் முக்கியப் பகுதியாக அமைகிறது.*

தொடை

*(அடித்தொடை)* முதற்றொடை | உறழ்ச்சித் தொடை *(ஓரடி-சீh;)*

*(இரண்டு அடிகள்)* | *(தொடை விகற்பம்)*

*மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடை*

*ஓரடி மோனை , அடுத்த அடி எதுகையும் சிறப்பிற்கு ரியவைகள். பாட்டின் நடையழகிற்கும் எளிதில் மனப்பாடம் செய்யவும் இது பயன்படுகிறது . மோனையும் எதுகையும் பாடலின் இருகண்களாக அமைகின்றன . தொடைச்சிறப்பில் மோனையின் வகைமைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.*

*ஓரினம் - அ – ஆ – ஐ – ஔ*
*இ ஈ எ ஏ* } *- மொழி முதல் உயிர்*
*உ ஊ ஒ ஓ*

*மெய் - ஞ், ந்/ ம், வ் / த், ச் - ஓரினம் - மொழி முதல் மெய்*

*இவை தனித்து இன மோனையாகவும் தனிமோனையாகவும் வரும் . மெய் உயிரோடு கூடி உயிர்மெய் இனமோனையாக வரும்.*

*எதுகை இன எதுகை (வல்லினம், மெல்லினம், இடையினம்), ஆய்த எழுத்து எதுகை , உயிரெழுத்து எதுகை ஆகிய மூன்றும் 13 வகையாக விரிவடைகிறது . வல்லொற்று, மெல்லொற்று எதுகைகளில் முதல் எழுத்துக்கும் அவ் ஒற்று எழுத்துக்கும் இடையில் ய் , ர், ழ் என்னும் 3 மெய்கள் வரும் . இது ஆசெதுகை எனப்படும் . முதலெழுத்தையும் எதுகையெழுத்தையும் இடைப்போந்து இணைத்தால் இப்பெயர் பெறல் சிறப்பு.*

*விட்டிசை வல்லொற்று எதுகை – எ, ஏ, அ, ஆ*

*அஅவினும் – உயிர் குறில் தனித்து வந்து விட்டிசைத்தல்.*

*தொடை – மோனை, எதுகை, இயைபு, முரண், அளபெடை*

*தொடை விகற்பம் - உறழ்ச்சித்தொடை – 5 x 11 = 55*

ஓரடிச்சீர்களில் அமைதல் - அளவடி – 4 சீர்களில் அமையும்.

1. இணை – 1, 2
2. பொழிப்பு – 1, 3
3. ஒரூஉ – 1, 4
4. கூழை – 1, 2, 3
5. மேற்கதுவாய் - 1, 3, 4
6. கீழ்க்கதுவாய் - 1, 2 , 4
7. முற்று – 1, 2, 3, 4

இவை ஏழும் முதலிலிருந்து எண்ணப்படும்.

8. கடையிணை – 3, 4
9. கடைக்கூழை – 2, 3, 4
10. இடைப்புணர் - 2, 3
11. பின் மோனை – 2, 4

இவை நான்கும் கடையிலிருந்து எண்ணப்படும்.

அடிமோனை – எந்தச் செய்யுளிலும் பயின்று வரும் . அடி எதுகை – 4 வகைப் பாக்கள், பாவினங்களில் வரும். பரிபாடல், மருட்பாவில் வரும். இந்தப் பாடல்களிலும் பயின்று வரும் . செந்தொடை பற்றியும் விளக்கப்பட்டுள்ளது . ஓசை நயம் குன்றாமல் ஆசிரிய அடிகளால் பாடப்பெறும். புலவர் குழந்தை எழுதிய யாப்பதிகாரம் நூலிலும் தொடை வகைமைகள் இவ்வாறே கணக்கிடப்பட்டுள்ளன.

ஓசை இனிமையும் பொருளமைப்பும் ஒரு சேரத் தந்து பாவுக்குச் சிறப்பூட்டும் உறுப்பு தொடை. பொதுநிலையில் முதற்தொடை மொத்தம் 5. வீரசோழியம் எதுகை , மோனை என்பதைக் குறிப்பிடுகிறது . விகற்பத்தொடை 7. நிரல் நிறுத்தல் , பொருள்கோள் அணியிலக்கணத்தில் வரும் . நிரல்நிறுத்தலைத் தொல்காப்பியம் யாப்போடு இணைத்துப் பேசுகிறது. சில பாடல்களில் பல தொடைகள் விரவிவரும் நிலையும் உண்டு என்பதை அவிநயம் குறிப்பிடுகிறது. ஆகவே, தொடை, வளர்ச்சி, மாற்றம், மயக்கம் ஆய்வுக்குரியது.

**மதிப்பீடு**

- தொடை உறுப்பைக் கவிஞர்கள் கவிப்புலமையை வெளிப்படுத்த பயன்படுத்தத் தொடங்கியிருக்கின்றனர். காலத்தின் மாற்றத்திற்கேற்பத் தொடை உறுப்புகள் புதிய வடிவம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.
- வடமொழியைத் தழுவி எழுதப்பட்டுள்ள இலக்கண நூல்களில் தொடையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.
- தமிழ் இலக்கண நூல்களில் தொடையில் மாற்றம் இல்லை. தொடை விகற்ப வகைமையில் சிற்சில வேறுபாடுகள் உள்ளன.

- *கவிஞர்கள் மத்தியில் மோனை, எதுகைத் தொடைக்குப் பெருமளவில் வரவேற்பு இருந்துள்ளது.*
- *தொடையின் வகைமைகளை இலக்கியப் பின்புலத்தோடு விவாதத்திற்குட்படுத்தி மறுவாசிப்பு செய்ய இடமிருக்கிறது.*
- *தொல்காப்பயத்திற்கு முன்பு வாய்மொழி இலக்கியங்களில் தொடை பற்றிய குறிப்புகள் இருந்திருக்கலாம். இலக்கிய வகைமைக்குப் பிறகே தொடை விதிகளாக்கப்பட்டிருக்கிறது. இலக்கண அறியாமலேயே எதுகை, மோனை, சந்தத்தில் பாடும் புலவர்களும் நாட்டுப்புறப் பாடகர்களும் உண்டு. தொடை இலக்கணத்தைக் கோட்பாடாகக் கொண்டு ஆய்வு நிகழ்த்த பரந்த வெளி இருக்கிறது.*
- *திரைக்கவிதைகளில், நாட்டுப்புறப் பாடல்களில் தொடையின் கட்டமைப்பை ஆராய்ந்து பார்க்கலாம்.*
- *கண்ணதாசன், வாலி, புலமைப்பித்தன், வைரமுத்து, அறிவுமதி போன்ற திரைக்கவிஞர்களின் பாடல்களில் தொடையின் கட்டமைப்பை ஆராயலாம். இவர்கள் தொடை உறுப்பை யாப்பிலக்கணமற்ற புதுக்கவிதையில் பயன் படுத்தியிருப்பதைக் கவிதையின், மொழியின் அடுத்தகட்ட வளர்ச்சியாகப் பார்க்க முடிகிறது. இன்றைய நவீனக் கவிதைகளிலும் தொடையின் கட்டமைப்பை ஆராயலாம்.*

**உதவிய நூல்கள்**


1. *தொல்காப்பியம், பொருளதிகாரம், இளம்பூரணம் (உ.ஆ.), மு.சண்முகம் பிள்ளை (பதிப்.ஆ.), முல்லை நிலையம், சென்னை.*
2. *தொல்காப்பியம், பொருளதிகாரம் பிற்பகுதி, பேராசிரியர் (உ.ஆ.), கு.சுந்தரமூர்த்தி (பதிப்.ஆ.), அண்ணாமலைப் பல்ககலைக்கழக வெளியீடு. சிதம்பரம்.*
3. *யாப்பருங்கலக்காரிகை, ந.மு.வேங்கடசாமி நாட்டார் உரை, கழக வெளியீடு.*
4. *யாப்பருங்கல விருத்தி, கழக வெளியீடு, சென்னை.*
5. *வீரசோழியம், புத்தமித்திரர், கோவிந்தராச முதலி (ப.ஆ.), என்.சி.பி.எச். வெளியீடு, சென்னை.*
6. *யாப்பதிகாரம், புலவர் குழந்தை, சாரதா பதிப்பகம், சென்னை.*
7. *தொடையதிகாரம், புலவர் குழந்தை, சாரதா பதிப்பகம், சென்னை.*
8. *தமிழ் இலக்கண நூல்கள், ச.வே.சு.(ப.ஆ.), மெய்யப்பன் பதிப்பகம், சென்னை.*
9. *இலக்கணத்தொகை (யாப்பு – பாட்டியல்), உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடு, சென்னை.*
10. *யாப்பருங்கலம், சுந்தரபாண்டியன் (வி.உ.ஆ.), கலைஞர் பதிப்பகம், சென்னை.*


புதிய அலைவட்டம்

11. தமிழில் யாப்பிலக்கணம் வரலாறும் வளர்ச்சியும், ய.மணிகண்டன், காலச்சுவடு வெளியீடு, சென்னை.
12. தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, ந.சுப்புரெட்டியார், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
13. கவிதையியல், க.பூரணச்சந்திரன், அடையாளம் வெளியீடு, திருச்சி.

……………………………………………………

புதிய அலையம்